<u>**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்**</u>

**முன்னிலை: செல்வி.E.ரிதுலா, B.A., L.L.B.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 09-ம் நாள், வியாழன்கிழமை

<u>இ.ம.எண்.9/2026 இன் அ.வ.எண்.73/2024</u>

கோபி ...மனுதாரர்/வாதி

/எதிராக/

1. சங்கரம்மாள் (எ) கமலம்
2. முருகேசன்
3. பாலசுப்ரமணி
4. 1-எண் இணை சார்பதிவாளர், நாமக்கல்
5. தமிழ்நாடு அரசு பை அதன்
   மாவட்ட ஆட்சித்தலைவர்,
   நாமக்கல். ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பு 24.06.2026-ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கேசவன், அவர்கள் ஆஜராகியும், 1, 2-ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.K.பாலசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 3-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியை பொருத்து அசல் வழக்கிலேயே தோன்றா தரப்பினராக உள்ளார். 4, 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.இளையரசன் அவர்கள் ஆஜராகியும் உள்ளனர். மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரையை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்து, தாவாவில் 4–வது ஆவணமாக தாக்கல் செய்துள்ள உயில் சாசன சாட்சிகளை சம்மன் செய்து விசாரணை மேற்கொள்ள உத்திரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/வாதி தரப்பு மனு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:**

மனுதாரர்/வாதி தனது மனுவில், மேற்படி வழக்கில், வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டு மற்ற வாதி தரப்பு சாட்சியங்கள் தாக்கல் செய்யும் பொருட்டு வாய்தா போடப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் மனுதாரருக்கு கடந்த 08.08.2024–ம் தேதியில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டு அனுபவித்து வந்து தாவா சொத்துக்களை பொறுத்து அதன் அசல் உரிமையாளரான கருப்பகவுண்டர் (எ) கருப்பண்ணகவுண்டர் கடந்த 15.10.1986–ம் தேதியில் எழுதிவைத்துள்ள உயில் ஆவணத்தை பொறுத்து அதில் செய்யப்பட்டுள்ள கைரேகை நீதிமன்றத்தால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு மேற்படி உயில் ஆவணத்தில் செய்யப்பட்டுள்ள கைரேகை தாவா சொத்துக்களின் அசல் உரிமையாளரான மேற்படி கருப்பகவுண்டர் (எ) கருப்பண்ணகவுண்டருடைய கைரேகை என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் தாவா 4–வது ஆவணமாக தாக்கலாகி அதில் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ள சின்னாகவுண்டர், பொண்ணம்பலம் ஆகியோரை நீதிமன்றம் மூலம் சம்மன் செய்து வரவழைத்து விசாரணை செய்து உண்மைதன்மையை கண்டறிவது அவசியம் இல்லவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே, இந்த மனுவை அனுமதிக்கவேண்டி கோரியுள்ளனர்.

**3. 1–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையையே 2–ம் எதிர்மனுதாரர் தமதாக ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:–**

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து 1, 2 எதிர்மனுதாரர்கள் தங்களது பதிலுரையை தாக்கல் செய்துள்ளார். அதில், தாவா

சொத்துக்களை கருப்பகவுண்டர் (எ) கருப்பண்ணகவுண்டர் கடந்த 15.04.1968–ல் கிரையம் பெற்று அனுபவித்து வந்தார். ஆனால் மேற்படி கருப்பகவுண்டர் (எ) கருப்பண்ணகவுண்டர் 15.10.1986–ம் தேதியில் ஒரு உயில் சாசனம் ஏற்படுத்தி வைத்துள்ளதாகவும், உயில் சாசனத்தில் உள்ள கைரேகை கருப்பகவுண்டர் (எ) கருப்பண்ணகவுண்டருடையது என ஊர்ஜிதம் செய்ததாகவும் சொல்லியிருக்கும் சங்கதிகள் ஏற்புடையதல்ல. மேற்படி கருப்பகவுண்டர் (எ) கருப்பண்ணகவுண்டர் 03.10.1987–ல் காலமான பின்னிட்டு தாவா சொத்துக்கள் மேற்படியாரின் வாரிசுகளான அவரது மனைவி மற்றும் மகளான 1–ம் பிரதிவாதிக்கும் வாரிசுப்படி பாத்தியப்பட்டு மேற்படியார்கள் அனுபவித்து வந்து அதன் அடிப்படையிலேயே 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். மேலும் தாவா சொத்து பொருத்து வாதி கூறுவது போல் உயில் சாசனம் மற்றும் உயில் சாசனம் அடிப்படையில் ஏற்பட்ட கிரைய ஆவணம் மோசடியாக ஏற்பட்ட ஆவணமாகும். தாவா சொத்துக்களில் வாதி சுவாதீனத்திலும் கிடையாது. தாவா சொத்துக்களை அபகரித்து துர்லாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே மனுதாரர்/வாதி பொய்யான சங்கதிகளை கூறி வழக்கினை காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடியாகத்தக்கதாகும். எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டியுள்ளார்.

**4.** 4, 5–ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 24.06.2026–ம் தேதியன்று "Without Prejudice Petition May Be Allowed" என்று மேற்குறிப்பு செய்துள்ளனர்.

**5.** இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்படவேண்டியுள்ளது.

**6.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**7.** மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

**7.1)** இவ்வழக்கு கோப்புகளை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலித்ததில், மனுதாரர்/வாதி இந்த அசல் வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கு தற்பொழுது வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் மனுதாரர்/வாதி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனு தாக்கல் செய்து, தாவாவில் 4–வது ஆவணமாக தாக்கல் செய்துள்ள உயில் சாசன சாட்சிகளை சம்மன் செய்து விசாரணை மேற்கொள்ள உத்திரவிடக் கோரியுள்ளார். இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வு காணப்படவேண்டிய ஒன்றாகும்.

**7.2)** மனுதாரர் தரப்பில், தாவா சொத்தை மனுதாரர்/வாதி கடந்த 08.08.2024–ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிறார் என்றும், அதன் அசல் உரிமையாளரான கருப்பகவுண்டர் (எ) கருப்பண்ணகவுண்டர் கடந்த 15.10.1986–ம் தேதியில் ஒரு உயில் சாசனம் எழுதிவைத்துள்ளார் என்றும் மேற்படி ஆவணம் இவ்வழக்கில் 4–வது ஆவணமாக தாக்கல் ஆகி உள்ளது என்றும், மேற்படி உயில் சாசனத்தில் கையொப்பமிட்டுள்ள சாட்சிகளை சம்மன் செய்து விசாரிக்க வேண்டியுள்ளதால் இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிடப்பட்டது. ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில், மேற்படி உயில் சாசனம் மற்றும் அதன் அடிப்படையில் ஏற்பட்ட கிரைய ஆவணங்கள் அனைத்தும் மோசடியாக ஏற்பட்ட ஆவணங்கள் என்றும், தாவா சொத்தில் மனுதாரர் சுவாதீனத்தில் இல்லையென்றும் மேற்படி கருப்ப கவுண்டர் (எ) கருப்பண்ண கவுண்டர் காலமான பின்னிட்டு அவரது வாரிசுகள் தாவா சொத்தை அனுபவித்து வந்து பின்பு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிடப்பட்டது.

**7.3)** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. இவ்வழக்கு கோப்புகளை பரிசீலித்ததில், மேற்படி கருப்பகவுண்டர் (எ) கருப்பண்ணகவுண்டர் கடந்த 15.04.1968–ம் தேதியில் அவரது மருமகள் ஆன செல்வி பெயரில் உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றும், மேற்படி உயில் சாசனத்தின் அடிப்படையில் வீரப்பன் என்பவர் கடந்த 07.02.2007–ம் தேதியில் கிரையம் பெற்றுள்ளார் என்றும், மேற்படி வீரப்பன் என்பவரிடம் இருந்து கடந்த 08.08.2024–ம் மனுதாரர்/வாதி தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்ற சங்கதிகளை முன்னிலைப்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது. ஆனால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி உயில் சாசனம் மற்றும் அதன் அடிப்படையில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணங்கள் அனைத்தும் மோசடியாக ஏற்பட்ட ஆவணங்கள் என்று வழக்கை நடத்தி வருகிறார்கள் என்று அறிய முடிகிறது. இந்நிலையில் மேற்படி அசல் வழக்கில் 4–வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 15.10.1986–ம் தேதியிட்ட உயில் சாசனத்தில் கையொப்பமிட்ட சாட்சிகளை சம்மன் செய்து மேற்படி உயில் சாசனத்தின் உண்மை தன்மையை நிரூபிக்கும் பொருட்டு இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

**7.4)** எனவே, மேற்படி உயில் சாசனத்தின் சாட்சிகளை சம்மன் செய்து விசாரனை செய்யும் போது, எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புள்ள நிலையில், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித அநீதியும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையில் இதர ஆட்சேபனைகளை குறித்து முழுவிசாரணைக்கு பின்னிட்டுதான் தீர்வு காண இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்கூறிய காரணங்களுக்காகவும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது.

**8. முடிவாக,**

1. இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

2. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 09-ம் நாள் ஜூலை மாதம் 2026-ம் வருடம் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

RIDHULA E

Digitally signed by RIDHULA E
Date: 2026.07.09 16:06:19 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>
இல்லை.

<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை.

RIDHULA E

Digitally signed by RIDHULA E
Date: 2026.07.09 16:06:25 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

அசல்/வரைவு /உத்தரவு
இ.ம.எண்.8/2026
அ.வ.எண்.62/2021
நாள்-09.07.2026.